வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 26.05.2025 திங்கட்கிழமை இதழ் : 146 பக்கங்கள் : 12

# வடக்கு, கிழக்கில் தமிழ் கட்சி ஆட்சியமைக்க முழு ஆதரவு!

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உயர்குழு வவுனியாவில் கூடி தீர்மானம்

- குமார. கோகுலன் -

வவுனியா, மே 26



**வடக்கு, கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சி சபைகளில் முன்னிலை வகிக்கும் ஏதேனும் ஒரு தமிழ்க் கட்சி ஆட்சியமைப்பதற்கு முழுமையான ஆதரவு வழங்குவது என்றும் இங்கு தேசிய கட்சிகள் ஆட்சியமைக்க ஆதரவு வழங்குவதில்லை எனவும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தீர்மானித்துள்ளது.**

வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அந்தக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்தன. சுமார் 3 மணி நேரம் நடந்த இந்த சந்திப்பில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

"வடக்கு, கிழக்கில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிகளே முன்னிலை வகிக்கின்றன. உள்ளூராட்சி சபை ஒன்றில் எந்தக் கட்சி முன்னிலை வகிக்கிறதோ அந்தக் கட்சிக்கு முழுமையான ஆதரவு வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.", என்று சந்திப்பில் பங்கேற்ற புளொட் தலைவர் த. சித்தார்த்தன்

11

## "ரெலோவின் முடிவில் மாற்றம் ஏற்படலாம்"!

ஊடக சந்திப்பை தவிர்த்த ரெலோவின் செயலர்!

- குமார. கோகுலன் -

வவுனியா, மே 26

"ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் உயர் மட்ட குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளில் ரெலோ கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படலாம். இதனால், செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்கவில்லை", என்று கூறி, அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் கோவிந்தன் கருணாகரம் கூட்டத்தின் நிறைவில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பை தவிர்த்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்ட ணியின் பங்காளிக் கட்சிகள் நேற்றையதினம் வவு னியாவில் கூடிப் பேசின. இந்த சந்திப்பில் ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பங்கேற்கவில்லை. அவ ருக்கு பதிலாக கட்சியின் பொதுச் செயலாளர் கோவிந்தன் கருணாகரமே பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐரோப்பிய உயர்மட்ட குழு புதனன்று இலங்கை வருகிறது

கொழும்பு, மே 26

போலந்து வெளிவிவகார அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி தலைமையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் 11 பேர் கொண்ட உயர்மட்ட குழு நாளை மறுதினம் இலங்கை வருகிறது.

இதன்போது அவர்கள், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களை சந்தித்து

11

## புகையிரத கடவையில் ரயில் மோதி ஒருவர் பலி!

கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சி, மே 26

பாதுகாப்பற்ற புகையிரத கடவையை மோட்டார் சைக்கிளில் கடந்தவர் ரயில் மோதி, அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

கிளிநொச்சி - பாரதிபுரம் பகுதியில் நேற்று மதியம் 12 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றது. இதில், பொ. அனுசன்ராஜ் (வயது 28)

11

## கடும் நெருக்கடிக்குள் ஐக்கிய மக்கள் சக்தி!

கொழும்பு, மே 26

பல தொகுதி அமைப்பாளர்கள் அடுத்தடுத்து பதவிகளில் இருந்து விலகி வருகின்றமை ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் அந்தக் கட்சிக்கு கிடைத்த போனஸ் ஆசனங்களை பங்கிடுவதில் குழப்பம் ஏற்பட்டது. இது தொடர்பில் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ எடுத்த முடிவை விமர்சித்தே அந்தக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் பதவி விலகி வருகின்றனர்.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்

11

## கடலுக்கு செல்ல வேண்டாம் மீனவர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, மே 26

சிலாபம் முதல் புத்தளம், மன்னார் வழியாக காங்கேசன்துறை வரையிலும், மாத்தறை முதல் அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலும் உள்ள கடற்பரப்புகளில் மறு அறிவித்தல் வரை மீன் பிடிக்கச் செல்லவேண்டாம் என்று

11

## 2 மாத குழந்தை உயிரிழப்பு!

வடமராட்சி, மே 26

சளி, இருமலால் பாதிக்கப்பட்ட இரு மாதங்களே நிரம்பிய குழந்தை ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தது.

துன்னாலை மேற்கை சேர்ந்த எட்வேட் தனுசன் டெரித் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

கடந்த சில நாட்களாக குழந்தைக்கு சளியுடன் கூடிய இருமல் காணப்பட்டது. இதனால், கடந்த 22ஆம் திகதி பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில்

11

## அமைப்பாளர்கள் விலக கட்சி காரணம் இல்லை!

ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மே 26

கட்சி தொகுதி அமைப்பாளர்களின் பதவி விலகல் அவர்களுக்கு ஏற்பட்ட கோபத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமாகும். ஒருசில நாட்களில் அது சரியாகும். இதற்குக் கட்சி காரணமில்லை. தேர்தல் முறைமையே காரணம் - என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமை பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே

11

## ஆசியாவின் 100 விஞ்ஞானிகளில் ஈழத் தமிழர்கள் இருவர் தெரிவு!

யாழ்ப்பாணம், மே 26

ஆசியாவின் சிறந்த விஞ்ஞானிகள் 100 பேரில், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மூத்த பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் மூத்த பேராசிரியர் சுந்தரலிங்கம் திருக்கணேஷ் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

சிங்கப்பூரை தளமாகக் கொண்டு வெளியாகும் "ஏசியன் சயன்டிஸ்ட்" என்ற சஞ்சிகை ஆசியாவின் சிறந்த விஞ்ஞானிகள் -100 பட்டியலை வெளியிட்டுள்ளது.



ஆண்டு தோறும் வெளியாகும்

11

## தமிழ் அரசியல் தலைவர்களில் ராஜபக்ஷக்களை கண்டோம்!

அமைச்சர் பிமல் ரத்நாயக்கா

கொழும்பு, மே 26

"உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலின்போது பாரம்பரியமான தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களிடம் தமிழ் ராஜபக்ஷக்களை(தமிழ் இனவாதிகள்) கண்டோம். தமிழ் ராஜபக்ஷக்கள் (தமிழ் இனவாதிகள்) தோற்றம் பெறுவார்கள் என்று ஒருபோதும் நினைக்கவில்லை - இது கவலைக்குரியது", இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அத்துடன், வடக்கு, கிழக்கில் நல்லிணக்கம், அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தி தங்கள் கட்சி செயல்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரச தொலைக்காட்சி ஒன்றில்

11

**உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாணக்கியனின் தனிநபர் பிரேரணையை நிறைவேற்றுவதற்கு ஒத்துழையுங்கள்!

## அரசை கோருகிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், மே 26

மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை அமைச்சு மட்டத்தில் முன்னெடுத்து வருவதாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்திருக்கும் நிலையில், மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு ஏதுவாக பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனால் கொண்டு வரப்படும் தனிநபர் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சி யின் பதில் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு ஏதுவாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனால் தனிநபர் சட்டமூலம் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது. இந்த நிலையிலேயே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தில் 2017 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தத்தை நீக்கி, மாகாண சபைகள் தேர்தலை மீண்டும் பழைய முறைமையிலேயே நடத்துவதற்கு ஏதுவாக தான் 2019 ஆம் ஆண்டிலும் பின்னர் 2023 ஆம் ஆண்டிலும் கொண்டுவந்த சட்டமூலம் நிறைவேற்றப்படவில்லை. அந்த சட்டமூலமே தற்போது சாணக்கியனால் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2019ஆம் ஆண்டில் அந்தத் தனிநபர் சட்டமூலத்தை முன்வைத்து சில நாட்களில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் அந்தச் சட்டமூலத்தை மூன்றாம் வாசிப்புக்கு எடுக்க வேண்டியிருந்த நிலையில், அது நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கப்பட்டது. இவ்வாறான பின்னணியில் தற்போது அரசாங்கமும் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை அமைச்சு மட்டத்தில் முன்னெடுத்து வருதாக அமைச்சர் சந்தன அபேரத்ன கூறியிருக்கிறார். பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனால் கொண்டு வரப்படும் இந்தத் தனிநபர் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மாகாண சபைகள் தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டும். இனியும் காலதாமதம் செய்யப்படக் கூடாது - என்றும் சுமந்திரன் மேலும் கூறினார். (ஐ)



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக தினமான நேற்று முன்தினம் காலையில் சகஷ்ட சங்காபிஷேகம் நடைபெற்றதுடன், மாலையில் திருக்கல்யாண உற்சவம் இடம்பெற்று சண்முகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராக தண்டிகையில் வெளிவீதியுலா வந்தபோது... (படம் ஐ. சிவசாந்தன்)

# 29ஆம் திகதி வரையில் வடக்கு, கிழக்கில் கனமழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், மே 26

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி வரை கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எதிர்வரும் 29 ஆம் திகதி வரையில் பிற்பகலில் அல்லது இரவு வேளைகளில் அவ்வப்போது மிதமானது முதல் கன மானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இந்த மழை மேற்காவுகை செயல்பாட்டால் உருவாகும் மழை என்பதனால் இடி மின்னலோடு இணைந்ததாகவே இந்த மழை கிடைக்கும்.

இதேவேளை நாளை செவ்வாய்க்கிழமை வங்காள விரிகுடாவில் பங்களாதேஷுக்கு தெற்காக காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் எந்த ஒரு பகுதிக்கும் எத்தகைய பாதிப்பும் கிடையாது.

ஆனாலும் இந்த நாட்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# வல்வெட்டித்துறையில் மயங்கி விழுந்து குடும்பஸ்தர் மரணம்!

வடமராட்சி, மே 26

வங்கியின் முன்பாக மயங்கி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

வடமராட்சி, வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மாவடி, சமரபாகுவை சேர்ந்த 60 வயது நபரே உயிரிழந்தவராவார்.

மயங்கிய நிலையில் காணப்பட்டவரை ஒட்டோ சாரதி ஒருவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார். இதைத் தொடர்ந்து, அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

கரவெட்டி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி அவரின் உடலை உடற்கூராய்வு செய்வதற்கு உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# வாய்க்காலுக்குள் மோ. சைக்கிளுடன் விழுந்து 3 பிள்ளைகளின் தந்தை பலி!

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, மே 26

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணேசபுரம் பகுதியில் வாய்க்காலுக்குள் மோட்டார் சைக்கிளுடன் விழுந்து ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர், கிளிநொச்சியை சேர்ந்த 36 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை ஆவார்.

கிளிநொச்சி மாவட்ட பதில் நீதிவான் சிவபால சுப்பிரமணியம் நேரில் சென்று சடலத்தை பார்வையிட்டு மரண விசாரணை மேற்கொள்ள சடலத்தை மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய மூன்று டிப்பர்கள் யாழில் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், மே 26

யாழில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற மூன்று டிப்பர்கள் நேற்று முன்தினம் மடக்கிப் பிடிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகாமையில் வைத்து இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் மூன்று டிப்பர்களுடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# யாழ். பல்கலை. பட்டப்பின் படிப்புகள் பீட வெள்ளிவிழாவையொட்டி நடைபவனி!



யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு நடைபவனியும் மரநடுகையும் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றன.

திருநெல்வேலியில் அமைந்துள்ள பட்டப்பின் படிப்புகள் பீட முன்றலில் ஆரம்பமான நடைபவனி யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் - பிறவுண் வீதி வழியே சென்று மருத்துவ பீடம் ஊடாக மீண்டும் பல்கலைக் கழகத்தை அடைந்தது.

நிகழ்வில் முக்கிய இடங்களில் மரம் நடுகையும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வுகளில், யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீ சற்குணராஜா பட்டப்பின் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி, முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் கண்ணதாசன் மற்றும் பீடாதிபதிகள் துறைத்தலைவர்கள் பேராசிரியர்கள் அலுவலர்கள் பழைய மாணவர்கள் என பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (ஐ)

# வெற்றிலைக்கேணியில் சட்ட ஆலோசனை முகாம்

வடமராட்சி, மே 26

கடந்த மார்ச் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி இல. 2430இற்கமைய சுவீகரிக்கப்படவுள்ள நிலங்களை பாதுகாப்பதற்காக வெற்றிலைக் கேணியில் மக்களுக்கான நீதி அமைப்பால் சட்ட ஆலோசனை முகாம் நேற்று நடத்தப்பட்டது.

இந்த வர்த்தமானி மூலம் வடக்கின் வவுனியா தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களில் சுமார் 5 ஆயிரத்து 700 காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன. இந்த நிலையில், கரையோர காணி உரிமையாளர்களை சந்தித்து அவர்களுக்கு சட்டரீதியான ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தலைமையில் 20இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் ஒன்றுகூடினர்.

ஆழியவளை தொடக்கம் கட்டைக்காடு வரையான மக்கள் அதிகளவானோர் குறித்த சட்ட ஆலோசனை முகாமில் பங்குகொண்டு சட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொண்டதுடன் அவர்களிடம் இருந்து சட்ட ரீதியான தகவல்களும் சேர்க்கப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
26.05.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் கட்சிகளால் தமிழ் மக்களுக்கு கிடைக்கப்போவது...!

உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கில் பெரும்பாலான சபைகளை அமைக்க வேண்டுமாயின், தமிழ் கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு அவசியம். வடக்கு - கிழக்கில் பெரும்பாலான சபைகளில் தமிழ் அரசுக் கட்சி முன்னிலை வகித்தாலும்கூட ஆட்சியமைக்க வேண்டுமாயின் ஏனைய தமிழ் கட்சிகளின் ஆதரவு கட்டாயம் தேவை. ஆனால், விட்டுக் கொடுப்புடன் சபைகளை அமைக்கும் முயற்சியில் இதுவரையில் தமிழ் கட்சிகள் மத்தியில் இணக்கப்பாடு ஏற்படவில்லை. இந்த நிலையில், தற்போது ஒவ்வொரு கட்சிகளும் சபைகளை அமைப்பதற்கான தந்திரோபாயங்களில் ஈடுபட்டு வருகின்றன. ஏட்டிக்குப்போட்டியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

தமிழ் கட்சிகள் எவ்வாறு சபைகளை அமைப்பது என்பதில் இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கும்போது, கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சர் பதவியை எவ்வாறு கைப்பற்றலாம் என்னும் அடிப்படையில் முஸ்லிம் கட்சிகள் வியூகங்களை வகுத்துக் கொண்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் இதுவரையில் எதிரும்புதிருமாக மோதிக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. ஆனால், தமிழ் கட்சிகளோ மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் குறிப்பாக, கிழக்கு மாகாணம் தொடர்பில் எவ்வித கரிசனையுமின்றி தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தும் முயற்சியில் மோதிக் கொண்டவர்கள் பின்னர், பாராளுமன்றத் தேர்தலில் மேலும் பிளவுற்று இப்போது உள்ளூராட்சி சபைகளை அமைக்கும் விடயத்தில் மோதிக் கொண்டிருக்கின்றனர். தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஒன்றுபட்டவர்கள்கூட பாராளுமன்றத் தேர்தலில் ஒன்றுபடவில்லை. அதற்கு சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்களில் ஓர் அணியினரின் சதி முயற்சிகளும் முக்கிய காரணம் என்னும் விடயமும் இருந்தாலும்கூட, சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு கட்சிகளால் செயல்பட முடியாவிட்டால் அந்தக் கட்சிகளை மக்கள் ஆதரிப்பதால் என்ன பயன் உண்டு?

உள்ளூராட்சித் தேர்தலில் பிரிந்து நின்றதுபோலவே மாகாண சபைகள் தேர்தலையும் கட்சிகள் எதிர்கொள்ளுமாக இருந்தால் மாகாண சபை மூலம் கிடைக்கக்கூடிய எந்தவொரு நன்மையும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. முக்கியமாக, கிழக்கு மாகாண தமிழ் மக்கள் அபிவிருத்தியில், சமூக முன்னேறத்தில் ஏனைய சமூகங்களுடன் போட்டியிட முடியாத கையறுநிலையிலேயே இருப்பார்கள். தமிழ் மக்களை சமூக, பொருளாதார ரீதியில் முன்னேற்றாத சுலோகங்களால் எந்தப் பயனும் இல்லை. இனிவரும் காலம் இன்னும் சிக்கலானதாக இருக்கப் போகிறது. இந்த நிலையில், தேசிய மக்கள் சக்தியும் வடக்கு - கிழக்கில் கணிசமான செல்வாக்குடன் இருக்கிறது. குறிப்பாக, கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் முஸ்லிம்களை இணைத்துக் கொண்டு மாகாண சபையை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் முஸ்லிம் காங்கிரஸ் முதலமைச்சரை கருத்தில் கொண்டு தென்னிலங்கையுடன்தான் நிற்கும். இதுதான் கடந்த கால வரலாறு. இதனைக் கருத்தில் கொண்டு தமிழ் கட்சிகள் தூரநோக்குடன் ஒன்றுமையாக செயல்படாதுவிட்டால், தமிழ் கட்சிகளால் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை.

## யாழில் ஊராட்சி முற்றம் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், மே 26

வடமாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் 2025 ஆம் ஆண்டுக்கான முதலாம் காலாண்டு ஊராட்சி முற்றக்கூட்டம் கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன்

கடந்த 22 ஆம் திகதி அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மற்றும் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ. வாகீசன் ஆகியோரது இணைத் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் தொடக்கவுரையாற்றிய அரசாங்க அதிபர், கிராம மட்டத்தில் அடையாளம் காணப்படும் தீர்க்க முடியாத பிரச்னைகளுக்கு ஆலோசனை வழங்கும் வகையில் இவ்வாறான கலந்துரையாடல்கள் அமைவதாகவும் இது பிரதேச செயலக ரீதியாகவும் நடைபெறவேண்டும் எனவும் அல்லது குறைந்தது கொத்தணி அடிப்படையில் பிரதேச செயலகங்களை இணைத்தாவது நடைபெற ஒழுங்கு செய்வது ஆரோக்கியமானது எனவும் குறிப்பிட்டார்.

மேலும் அரசியலில் பெண்களின் பங்கு காத்திரமானது எனவும் குடிசார் அமைப்புகளின் பிரதிநிதிகளில் 07 பெண்கள் நடைபெற்ற உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றியீட்டியமையானது வரவேற்கத்தக்க விடயம் எனவும் கூறினார். இதன் மூலம் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் குரல் காத்திரமாக ஒலிக்க வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

மாவட்ட அளவில் தீர்க்கப்பட முடியாத பிரச்னைகளாக அடையாளம் காணப்பட்ட சிறுவர், பெண்கள் நலன் மற்றும் பாதுகாப்பு, கல்வி, விவசாயம், பெண்களின் சிறு கைத் தொழில் உற்பத்தி, கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் உள்ளிட்ட பல காத்திரமான விடயத் தலைப்புகள் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டதுடன் மாவட்ட ரீதியில் குடிசார் அமைப்புகளின் சம்மேளனத்தால் முன்னெடுக்கப்படவுள்ள பரிந்துரைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. மேலும், ஊராட்சி முற்ற அஞ்சல் பெட்டியின் நோக்கம் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண ஜி.பி.வி. தகவல் திரட்டும் வெளியீடு செய்யப்பட்டது. (எ)

## ஒன்றிணைந்த அரசியல் பயணம் மைத்திரியின் மகனுக்கு அழைப்பு

### நாமல் ராஜபக்ஷ விடுத்தாராம்

கொழும்பு, மே 26

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேனவை எதிர்கால அரசியல் நடவடிக்கைகளில் தன்னுடன் இணைந்து பணியாற்ற சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ அழைத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

முந்தைய தேர்தல்களிலும் தஹாம் சிறிசேன பொதுஜன பெரமுனவுடன் இணைந்து பணியாற்ற அழைக்கப்பட்டிருந்தார்.

எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை வலுவான முறையில் மேற்கொள்வதே இதன் நோக்கம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த அழைப்புக்கு தஹூம் சிறிசேன ஒப்புதலோ அல்லது மறுப்போ தெரிவிக்கவில்லை. எதிர்காலத்தில் அவர் இது குறித்து ஒரு முடிவை எடுப்பார் என்றும் கூறப்படுகிறது.

இதனிடையே, சமீபத்தில் பத்திரமுல்லையில் உள்ள போரில் உயிரிழந்த இராணுவத்தினரின் நினைவுச்சின்னத்துக்கு நாமல் ராஜபக்ஷவும் தஹூம் சிறிசேனவும் இணைந்து அஞ்சலி செலுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ. ம. சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளர் இராஜினாமா!


கொழும்பு, மே 26

ஐக்கிய மக்கள் சக்தியில் தொடர்ந்தும் பிரபல உறுப்பினர்கள் பதவிகளிலிருந்து விலகி வருகின்றனர். அந்த வகையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளர் ரஞ்சித் அலுவிஹாரே பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். தனது பதவி விலகல் கடிதத்தை கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


இந்தக் கடிதத்தில் தனது பதவி விலகலுக்கான காரணத்தை குறிப்பிட் டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சில அதிருப்தியான சூழலே அவர் பதவி விலகக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் தான் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். குடும்பத்தில் சலசலப்பு வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் குறையும். உறவினர்களால் சங்கடங்கள் வரும். எளிய உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்**
உங்கள் இலக்குகளை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். புது பொருள் வந்து சேரும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**கடகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்ன கவலைகள் வந்து போகும். உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தப்படுவீர்கள்.

**துலாம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார்.

**விருச்சிகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் உங்களை ஆலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**தனுசு**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும்.

**மகரம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதிய வேலை கிடைக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். தோற்றப் பொலிவு கூடும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள்.

# நவம்பர் மாத இறுதிக்குள் நிதியை சரியான முறையில் பயன்படுத்துக

## பிரதேச செயலர்களுக்கு அரசாங்க அதிபர் பணிப்பு



யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை நவம்பர் மாத இறுதிக்குள் சரியான முறையில் பயன்படுத்துமாறு பிரதேச செயலாளர்களுக்கு அரசாங்க அதிபர் பணிப்பு விடுத்துள்ளார்.

வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த 22 ஆம் திகதி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கிராமிய அபிவிருத்தித் திட்டம், வீதி அபிவிருத்தித் திட்டம், வீட்டுத் திட்டம், குடிநீர், போன்ற திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் அரசாங்க அதிபர் தலைமையில் ஆராயப்பட்டு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

மேலும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டம், வீதி அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை இவ்வாண்டு நவம்பர் மாத இறுதிக்குள் சரியான முறையில் பயன்படுத்துமாறு பிரதேச செயலாளர்களுக்கு அரசாங்க அதிபரால் பணிப்புரை விடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்டச் செயலக பிரதம கணக்காளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக பிரதி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட செயலக திட்ட மிடல் துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ)

# இலங்கைக்கான பாடங்கள் குறித்து சீன பேராசிரியர் யாழில் சிறப்புரை

யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாண பல்கலைக்கழக பொருளியல் துறையின் ஏற்பாட்டில் நடைபெற்ற கருத்தரங்கில் சீன நாட்டு பேராசிரியர் ஹீ யான்கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலைய ரங்கத்தில் கடந்த வெள்ளிக் கிழமை பேராசிரியர் ஹீ யான் சிறப்புரையாற்றினார்.

"சீனாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் முழுமையான வறுமை ஒழிப்பு: இலங்கைக்கான பாடங்கள்" எனும் தலைப்பில் குறித்த உரை நிகழ்த்தப்பட்டது.

சிறப்புரை அமர்வில் பங்கேற்றவர்கள் இறுதியில் கேள்வி கேட்பதற்கு சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

சீனாவின் தலைநகரான பீஜிங்கில் உள்ள சிங்குவா பல்கலைக்கழகத்தில் சர்வதேச பகுதி ஆய்வுகள் கற்கை நிறுவனத்தின் உதவி பேராசிரியரா கஹீ யான் செயல்படுகிறார். (எ)



# பூநகரியில் சட்டவிரோத கடைகளை அகற்ற முற்பட்டதால் பெரும் குழப்பம்

கிளிநொச்சி, மே 26

முழங்காவில் பகுதியில் சட்டவிரோதமான முறையில் அரச காணிக்குள் அமைக்கப்பட்ட கடைகளை அகற்றுவதற்கு பூநகரி பிரதேச சபை செயலாளர் மற்றும் வருமான வரிப் பரிசோதகர் நிலையை பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் அங்கு சென்ற போது அந்த இடத்தில் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டதுடன் அங்கிருந்தவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது அனுமதியில்லாமல் அமைக்கப்பட்ட கடைகளில் வைக்கப்பட்டிருந்த பொருட்களை அங்கிருந்து அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கும் கடை உரிமையாளர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இதேவேளை சட்டவிரோத கட்டுமானங்கள் அகற்றப்படுவதை படம், காணொலி எடுக்க முற்பட்டவர்களை பிரதேச சபை அதிகாரி ஒருவர் தாக்க முற்பட்டதுடன் கைத்தொலைபேசியை பறிக்கவும் முற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் பிரதேச சபை செயலாளர், சட்டவிரோத கட்டுமானங்களை முன்னெடுக்க வேண்டாமெ னவும் உரிய அனுமதியை பெற்ற பின்னர் பணிகளை முன்னெடுக்கலாமெனவும் தெரிவித்து வெளியேறினார். (எ)

# நல்லூர் கந்தன் மேற்கு வீதியில் பந்தலுக்கான ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 26



நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருந்திருவிழாவை முன்னிட்டு இவ்வாண்டிலிருந்து உற்சவ காலத்தில் ஆலய மேற்கு வீதியில் அமைக்கப்படவுள்ள பந்தலுக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழா எதிர்வரும் யூலை மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடை பெறவுள்ளன.

இந்த நிலையில் பந்தல் அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய மேற்கு வீதியில் நல்லை ஆதீனத்துக்கு முன்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில் பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளர்களின் உயிர்கள் ஆபத்தான நிலைமையில்!

## மருத்துவ, சிவில் உரிமைகளுக்கான தொழிற்சங்க கூட்டணி எச்சரிக்கை!

கொழும்பு, மே 26

**நாடு முழுவதும் உள்ள பல அரச மருத்துவமனைகளில் அவசர மருத்துவ சிகிச்சைக்கான அத்தியாவசிய மருந்துகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் பற்றாக்குறையால் நோயாளர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டணி தெரிவித்துள்ளது.**



சுகாதார அமைச்சுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் இடையிலான இழுபறிநிலை, நாட்டின் சுகாதார அமைப்பை பராமரிக்க அமைச்சக அதிகாரிகள் நேரடி முடிவுகளை எடுக்கத் தவறியதால் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் மருந்து பற்றாக்குறை மோசமாக உள்ளது என்று அந்தக் கூட்டணியின் தலைவர் சிறப்பு மருத்துவர் சமல் சஞ்சீவ கூறியுள்ளார்.

சுவாச நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகள், சக்தி வாய்ந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகள், புற்றுநோய் நோயாளிகளுக்கு அத்தியாவசிய மருந்துகள், நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் மருந்துகள், உயர் இரத்த அழுத்தம், இதய நோய், அதிக கொழுப்பின் அளவு, பிற தொற்றாத மற்றும் தொற்று நோய் கட்டுப்பாட்டு மருந்துகள், அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் வடிகுழாய்கள் மற்றும் நூல்கள் போன்ற வற்றுக்கு மருத்துவமனைகளில் கடுமையான பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சுகாதார அமைச்சுக்கு உள்ளேயும் வெளியேயும் பல நிர்வாக சிக்கல்கள் எழுந்துள்ளமையால் மருந்தகக் கூட்டுத்தாபனம், மருந்து ஒழுங்குமுறை ஆணையம், மருத்துவ விநியோக பிரிவு, மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனம் ஆகியவை முறையாக நிர்வகிக்கப்பட வேண்டும்.

இல்லையெனில், நாட்டில் மிகப்பெரிய சுகாதார நெருக்கடி ஏற்படக்கூடும். அனைத்து பொறுப்பான அதிகாரிகளும் இந்த சூழ்நிலையில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மருத்துவர் சமல் சஞ்சீவ மேலும் கூறினார். (ஐ)

# கொழும்பு மாநகர சபை யாரிடம் என்பது ஒரு வாரத்தில் தெரியும்!

## பிரதி அமைச்சர் எரங்க குணசேகர



கொழும்பு, மே 26

கொழும்பு மாநகர சபையை யார் கைப்பற்றுவது என்பதை இன்னும் ஒரு வாரத்தில் நாட்டு மக்கள் தெரிந்து கொள்ளலாம். அரசாங்கத்தின்மீது போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து அரசாங்கத்தை வீழ்த்த முடியாது என்பதை எதிர்க்கட்சியினர் வெகுவிரைவில் விளங்கிக் கொள்வார்கள் என்று விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அதிகளவான ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பது தொடர்பில் மாறுபட்ட கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கான ஆணை தேசிய மக்கள் சக்திக்கு உண்டு. சகல எதிர்க்கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் இணைத்து கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி பல்வேறு வகையான முயற்சிகளை மேற்கொள்கிறது.

கொழும்பு மாநகர சபையை யார் கைப்பற்றுவது என்பதை நாட்டு மக்கள் இன்னும் ஒரு வாரத்தில் தெரிந்து கொள்ளலாம். பெரும்பான்மை பலத்துடன் நாங்களே ஆட்சியமைப்போம். சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன. இவ்வாறான கருத்துகளால் அரசாங்கத்தை வீழ்த்த முடியாது என்பதை எதிர்கட்சிகள் வெகுவிரைவில் தெரிந்து கொள்ளலாம் - என்றார். (ஐ)

# நாளை மறுதினம் தென்னக்கோன் விசாரணை குழுவில் முன்னிலையாவார்!

கொழும்பு, மே 26

கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸமா அதிபர் தேசபந்து தென்னக்கோன், தனக்கு எதிராக சுமத்தப்பட்ட 22 குற்றச்சாட்டுகளுக்கும் விளக்கமளிப்பதற்காக நாளை மறுதினம் விசாரணை குழுவில் முன்னிலையாகவுள்ளார்.

தேசபந்து தென்னக்கோன் கடந்த திங்கட்கிழமை தமது சட்டத்தரணி டி. வீரவிக்ரமவுடன் குறித்த குழுவின் முன் முன்னிலையானபோது அவருக்கு குற்றப்பத்திரிக்கை வழங்கப்பட்டது.

தமக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளிக்க தேசபந்து தென்னக்கோன் அந்தக் குழுவிடம் கால அவகாசம் கோரியிருந்தார். நாளை மறுதினம் 28ஆம் திகதி வரை அவருக்கு அவகசாம் வழங்கப்பட்டிருந்தது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட வேண்டிய சான்றுகள், ஆவணங்கள் குறித்தும் அந்த குழு விளக்கமளித்தது. இதன்போது, சத்தியப் பிரமாண பத்திரங்கள் வடிவில் சாட்சியங்களை வழங்க அவர் ஒப்புக்கொண்டார்.

தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் குழுவின் முன்னிலையில் முதன்முறையாகக் கடந்த திங்கட்கிழமை தேசபந்து தென்னகோன் முன்னிலையானார். இதன்போது அவர் எழுப்பிய ஆரம்ப ஆட்சேபனையையும் குறித்த குழு நிராகரித்திருந்தது.

தேசபந்து தென்னக்கோன் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட குழுவுக்கு உயர் நீதிமன்ற நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன தலைமை தாங்குகிறார். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நீல் இத்தவெல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் லலித் ஏக்கநாயக்க ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தவிசாளர் பதவியை ஏற்க மரிக்கார் மறுப்பு

கொழும்பு, மே 26

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பக்கீர் மரிக்கார் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியை மீண்டும் ஏற்க மறுத்துவிட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென்னிலங்கை ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலுக்கு பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியை இராஜிநாமா செய்திருந்தார். எனினும், கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இம்தியாஸ் பக்கீர் மரிக்காரை அந்தப் பதவிக்கு மீண்டும் நியமித்தார்.

ஆனால், அவர் இன்னமும் அந்தப் பதவியை ஏற்கவில்லை. அதை அவர் ஏற்க மாட்டார் என்றும் கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி அந்த செய்தி வெளியிடப்பட டுள்ளது. (ஐ)

# மறைந்த பிரபல நடிகை மாலினிக்கு முன்னாள் ஜனாதிபதிகள் அஞ்சலி!



கொழும்பு, மே 26

மறைந்த பிரபல சிங்கள திரைப்பட நடிகை மாலினி பொன்சேகாவுக்கு முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ நேற்றைய தினம் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தரங்கனி மண்டபத்தில் மாலினி பொன்சேகாவின் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு வருகை தந்த முன்னாள் ஜனாதிபதிகள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த மாலினி பொன்சேகாவின் உடல் நேற்று காலை முதல் பொது மக்களின் அஞ்சலிக்காக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தரங்கனி மண்டபத்தில் வைக்கப்பட்டது.

மாலினி பொன்சேகாவின் இறுதிச் சடங்குகள் இன்று பிற்பகல் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அரச மரியாதையுடன் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலஞ்சம் பெற முயன்ற அதிகாரிகள் இருவருக்கு 28 ஆண்டு கடூழிய சிறை!

## கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்தது

கொழும்பு, மே 26

ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட பெண்கள் இருவரை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தாமல் இருப்பதற்கு 50 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாக பெற முயன்ற குற்றத்துக்காக மது வரித் திணைக்களத்தின் இரு அதிகாரிகளுக்கு 28 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டபோதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

2013 நவம்பர் 13ஆம் திகதி ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தாமல் விடுவிக்க 50 ஆயிரம் ரூபாயை மதுவரி திணைக்கள அதிகாரிகள் இருவர் கோரியிருந்தனர்.

வழக்கு விசாரணைகளில் அவர்களின் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன. அத்துடன், இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். இதையடுத்து, பிரதிவாதிகளுக்கு 28 வருட கடுழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிப்பதது. அத்துடன், இருவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. (ஐ)

# உள்ளூராட்சி சபைகளின் முதல் கூட்டத்துக்கு சிக்கல்

கொழும்பு, மே 26

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் பெற்ற கூடுதல் உறுப்புரிமைகளுக்கான (போனஸ் ஆசனம்) பெயர்கள் தேர்தல் ஆணையத்துக்குக் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, உள்ளூராட்சி மன்றங்களின் தொடக்கக் கூட்டங்களை கூட்டுவதில் நடைமுறை சிக்கல்கள் எழுந்துள்ளன.

உள்ளூராட்சி நிறுவனங்களை நிறுவும் பணிகள் அடுத்த மாதம் இரண்டாம் திகதிக்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான கூட்டத்துக் கான நிகழ்ச்சி நிரலை புதிய உறுப் பினர்களுக்கு ஒரு வாரத் துக்கு முன்பே சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அறிவிக்க வேண்டும்.

இருப்பினும், பெயர்களை அறிவிப்பதில் ஏற்பட்ட தாமதங்களால் ஆவணங்களை அச்சிடும் பணி அடுத்த வாரத்தின் முதல் பாதியிலேயே நடைபெறும், இதனால் உள்ளூராட்சி வழக்கமான நடவடிக்கைகள் தடைப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகரெட்களுடன் 7 பேர் கைது!

கொழும்பு, மே 26

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஒரு கோடியே 86 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களுடன் 7 பேர் கட்டுநாயக்கா விமான நிலையத் தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள், அநுராதபுரம், கெக்கிராவைவ, கஹவத்தை, கொழும்பு ஆகிய இடங்களை சேர்ந்தவர்களாவர்.

குவைத், டுபாய், ஓமானில் இருந்து 3 விமானங்கள் மூலம் வந்தவர்களே இவ்வாறு கைதாகினர். அவர்களிடமிருந்து ஒரு இலட்சத்து 24 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்கள் கைப்பற்றப் பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நீர்கொழும்பு கொலை; இருவர் கைதாகினர்

கொழும்பு, மே 26

நீர்கொழும்பில் உணவகம் ஒன்றின் உரிமையாளர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் 19, 23 வயதுடையவர்களாவர். அவர்கள் கைதானபோது சுமார் ஒரு கிலோ ஐஸ் போதைப்பொருள், 3 கைபேசிகள், மோட்டார் சைக்கிள் ஒன்று என்பன கைப்பற்றப் பட்டன என்றும் பொலிஸார் கூறினர்.

கடந்த திங்கட்கிழமை இந்தக் கொலை இடம்பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொலிஸ் நிலையங்களில் கமெராக்கள் பொருத்துக

### மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, மே 26

**நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் சி. சி. ரீ. வி. கமெராக்கள் பொருத்தப்பட வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

"விசேடமாக பொலிஸ் நிலையங்களில் உள்ள சிறைக் கூண்டுகளில் சி. சி. ரீ. வி. கமெராக்கள் பொருத்தப்பட வேண்டும்.

பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் கைதுசெய்யப்படும் சந்தேக நபர்கள் பொலிஸ் நிலையங்களின் சிறைக்கூண்டுகளில் உயிரிழக்கும் சம்பவங்கள் கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகின்றன. இதனை தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அந்த ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. (ஐ)




காசா குழந்தைகளை பாதுகாக்க வலியுறுத்தி கொழும்பிலுள்ள ஐ. நா. அலுவலகம் முன்பாக நடத்தப்பட்ட போராட்டத்தில்...

# சிறை மருத்துவமனையில் துமிந்த திஸநாயக்க அனுமதி!

கொழும்பு, மே 25

தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கி விவகாரத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் துமிந்த திஸநாயக்கா சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவர்கள் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் அவர் சிறைச்சாலை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப் பட்டது.

கொழும்பு - வெள்ளவத்தை பகுதியில் இருந்து அண்மையில் தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டிருந்தது. இந்த சம்பவம் தொடர்பில் இரு பெண்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் முன்னாள் அமைச்சர் துமிந்த திஸநாயக்க கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார். அவர் கல்கிசை நீதிமன்றின் உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்என்பது குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கிமுனையில் கொள்ளையிட்டவர் கைது!

கொழும்பு, மே 26

நகைக்கடை ஒன்றில் துப்பாக்கிமுனையில் நடத்தப்பட்ட கொள்ளைச் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த 2020 ஜனவரி 16ஆம் திகதி கம்பஹா - தொம்பே பகுதியில் நகைக் கடை ஒன்றுக்குள் புகுந்த இருவர் துப்பாக்கி முனையில் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, சுமார் 65 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டிருந்தன. இது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கொள்ளையடித்த நகைகளை வைத்திருந்த ஒருவரும் அவற்றை விற்பனை செய்ய முயன்றவருமே இவ்வாறு கைது செய்யப் பட்டனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் கைதான பிரதான சந்தேகநபர், 2020ஆம் ஆண்டு பிலியந்தலையில் துப்பாக்கிமுனையில் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை கொள்ளையடித்தார். 2021 இல் தலங்கம பகுதியில் 5 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கைபேசிகளை நிறுவனம் ஒன்றில் கொள்ளையடித்தார். இதேகாலப்பகுதியில் 3 கோடி ரூபாய்க்கும் அதிகமான நகைகள், பணம் என்பவற்றை கம்பஹா நிதி நிறுவனம் ஒன்றில் கொள்ளையடித்தார் என்று தெரிய வந்ததாக பொலிஸார் கூறினர். (ஐ)

## 13 வயது சிறுமி துஷ்பிரயோகம் பிரதான சந்தேகநபர் சிக்கினார்

கொழும்பு, மே 26

13 வயது சிறுமி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப் பட்ட சம்பவம் தொடர்பில் தலைமறைவாக இருந்த சந்தேகநபரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை - நமுனுகுலையில் 13 வயது சிறுமி ஒருவர் கடந்த 21ஆம் திகதி காணாமல் போயிருந்தார். கடைக்கு சென்ற தனது மகள் காணாமல் போனமை தொடர்பில் பசறை பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் தந்தை முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் பசறை டெமேரியா மீரியபெத்த ராக்கமலை பகுதியில் லயன் குடியிருப்பில் சிறுமியை மீட்டனர்.

சிறுமியிடம் விசாரணை நடத்திய பொலிஸார், தான் பசறை நகருக்கு சென்றபோது பேருந்தின் நடத்துநருடன் நட்பு ஏற்பட்டதாகவும் அவரின் அழைப்பின்பேரில் வீட்டுக்கு சென்றார் எனவும் அங்கு அவர் தன்னை வன்புணர்ந்ததாகவும் கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து, சிறுமியை பசறை மருத்துவமனையில் சேர்ப்பித்த பொலிஸார், சந்தேகநபரை தேடி வந்தனர்.

இந்த நிலையில், பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் 28 வயதான சந்தேகநபரை கைது செய்தனர். (ஐ)

# "சமிந்தவின் விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை"

கொழும்பு, மே 26

"சமிந்த விஜயசிறி தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து விலகுகிறார் என்று குறிப்பிட்டு கையளித்த கடிதத்தை தலைவர் சஜித் பிரேமதாஸ ஏற்றுக் கொள்ளவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியுடன் அரசியல் பயணத்தை தொடர வேண்டும் என்பதே பொதுச் செயலாளர் என்ற ரீதியில் நான் வழங்கும் அறிவுரை", என்று ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்துக்கு பெரும்பான்மை அற்ற சபைகளில் எதிர்க்கட்சிகள் இணைந்து ஆட்சியமைப்பதற்கான பேச்சுகள் வெற்றிகரமாக நடக்கின்றன. மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவுள்ளன. கொழும்பு மாநகர சபையில் எதிர்க்கட்சிகள் ஆட்சியமைக்கவுள்ளன. சுயேச்சை குழுக்கள் வெறுமனே பேச்சுக்கு மாத்திரமே சென்றுள்ளன.

சமிந்த விஜயசிறி தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து விலகியமைக்கான காரணம் குறித்து கேட்டறிந்த பின்னரே எந்தவொரு கருத்தையும் கூற முடியும். என்ன அதிருப்தி என்பதையும் அவரே கூற வேண்டும்.

கட்சிக்குள் அவருக்கு எந்த பிரச்னையும் கிடையாது. எதிர்க்கட்சி தலைவருக்கு பதவி விலகல் கடிதம் வழங்கப்பட்டுள்ள போதிலும், அவர் அதனை ஏற்றுக் கொள்ள வில்லை. கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ எனக்கு அறிவித்திருக்கிறார். எனினும், சமிந்த விஜயசிறியுடன் கலந்துரையாடிய பின்னரே எந்தவொரு தீர்மானத்துக்கும் வர முடியும்.

கலவரமடையாது தொடர்ந்தும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் அரசியல் பயணத்தை தொடர வேண்டும் என்பதே பொதுச் செயலாளர் என்ற ரீதியில் நான் வழங்கும் அறிவுரை - என்றார்.

# குறைந்தபட்ச நாளாந்த ஊதியத்தை ரூ. 1,800ஆக வரையறுத்து வர்த்தமானி

கொழும்பு, மே 26

நாட்டிலுள்ள ஊழியர்களின் குறைந்தபட்ச தேசிய மாதாந்த ஊதியம் 27ஆயிரம் ரூபாயாகவும் தேசிய நாளாந்த ஊதியம் 1800 ரூபாயாகவும் வரையறுக் கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஊதியத் தொகை ஏப்ரல் முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டின் மூன்றாம் இலக்க தொழிலாளர்களின் தேசிய குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் பிரிவு 3இன் திருத்தத்தைத் தொடர்ந்து குறித்த வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும்,

திருத்தப்பட்ட சட்டப்பிரிவுக்கு அமைவாக, 2025 ஏப்ரல் முதலாம் திகதி முதல் 2025 டிசெம்பர் 31ஆம் திகதி வரையில் தேசிய குறைந்தபட்ச மாதாந்த ஊதியம் 9 ஆயிரத்து 500 ரூபாயாலும் தேசிய குறைந்தபட்ச நாளாந்த ஊதியம் 380 ரூபாயாலும் அதிகரிக்க வேண்டும்.

அத்துடன், 2026 ஜனவரி முதலாம் திகதி முதல் தேசிய குறைந்தபட்ச ஊதியம் 3 ஆயிரம் ரூபாயாலும் தேசிய குறைந்தபட்ச நாளாந்த ஊதியம் 120 ரூபாயாலும் அதிகரிக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# பெருந்தொகை மருந்துகளுடன் இளம் பெண் சிலாபத்தில் கைது

சிலாபம், மே 26

மருந்து சீட்டு இல்லாமல் அதிகளவு மருந்துகளை கொண்டு சென்ற பெண் ஒருவர் சிலாபம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிலாபம் - புத்தளம் வீதியில் வானில் பயணித்த 29 வயதான பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் பயணித்த வாகனம் ஒன்றை சோதனையிட்டனர். அதில், 64 பெட்டிகளில் மருந்துகளை கைப்பற்றினர். அந்த மருந்துகளை கொள்வனவு செய்தமைக்கான சிட்டை எதுவும் அந்தப் பெண்ணிடம் இருக்கவில்லை. அத்துடன், அவர் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, பெண்ணை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி போனஸ் ஆசன விவகாரம்:

# முறையான பங்கீடு இல்லையேல் பின்விளைவுகளை சந்திக்க நேரும்!

### ஐக்கிய மக்கள் சக்திக்கு பங்காளி தலைவர் எச்சரிக்கை

நுவரெலியா, மே 26

**உள்ளூராட்சியின் போனஸ் ஆசன பங்கீட்டை ஐக்கிய மக்கள் சக்தி முறையாக செய்யவில்லை. இதனை முறையாக பங்கீடு செய்வதற்கு தவறும் பட்சத்தில் ஐக்கிய மக்கள் சக்தி பல பின்விளைவுகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்று எச்சரித்துள்ளார் அந்தக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எம். பியுமான வே. இராதாகிருஸ்ணன்.**



இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மலையக மக்கள் முன்னணி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தும் தனித்தும் தமிழ் முற்போக்கு கூட்டணியுடன் இணைந்தும் போட்டியிட்டது. தனித்து போட்டியிட்ட இடங்களில் அதிக உறுப்பினர்களை பெற்னது. ஏனைய இடங்களிலும் மலையக மக்கள் முன்னணி சார்பாக போட்டியிட்ட உறுப்பினர்கள் அதிக வாக்குகளை பெற்றனர். இதன் மூலம் ஐக்கிய மக்கள் சக்தி போனஸ் ஆசனங்களை பெறுவதற்கு தங்களுடைய பங்களிப்பை செய்துள்ளார்கள்.

குறிப்பாக நுவரெலியா மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து வேட்பாளர்களும் தோல்வி அடைந்த நிலையில் மலையக மக்கள் முன்னணியின் உறுப்பினர் மாத்திரமே வட்டாரத்தை வெற்றி கொண்டார்.

எனவே, இவ்வா றான நிலையில் ஐக்கிய மக்கள் சக்தி தற்போது போனஸ் ஆசனங்களை பங்காளி கட்சிகள் அனைத்துக்கும் பாகுபாடின்றி பகிரவேண்டும். ஏனெனில், நுவரெலியாவில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பாக பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இரண்டு உறுப்பினர்களின் நானும் ஒருவன்.

எனவே, இது தொடர்பாக எமது கட்சியிலும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இதனை முறை யாக பங்கீடு செய்ய ஐக்கிய மக்கள் சக்தி தவறும் பட்சத்தில் கட்சி பல பின்விளைவுகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படலாம். இதனை கருத்தில் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தார் பாக். தூதர்!



கொழும்பு, மே 26

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான மதம், அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக நிலைகளிலான இரு தரப்பு தொடர்புகள் மேலும் பலமடைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். பழைய நண்பரின் வருகை கடந்த காலங்களை நினைவுபடுத்தியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பஹீம் உல் அசீஸிடம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அவரின் இல்லத்தில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பஹீம் உல் அசீஸ் சந்தித்துப் பேசினார்.

இதன்பாது, இலங்கை நெருக்கடியான நிலையை எதிர்கொண்ட சந்தர்ப்பத்தில் நெருக்கமான நண்பன் என்ற அடிப்படையில் பாகிஸ்தான் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியது. யுத்தகாலத்தில் பாகிஸ்தான் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியதால் விடுதலை புலிகள் அமைப்பு கொழும்பில் இருந்த அப்போதைய பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரை கொலை செய்ய முயற்சித்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை நெருக்கடிகளை எதிர்கொண்ட சந்தர்ப்பத்தில் அயல் - நட்பு நாடு என்ற அடிப்படையில் பாகிஸ்தான் இலங்கைக்கு தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கியது.

ஆகவே, இவற்றுக்கு மனமார்ந்த நன்றி தெரிவிப்பதற்கு கட மைப்பட்டுள்ளேன். இரு நாடு களுக்கும் இடையி லான மதம், அரசியல்,பொருளாதாரம் மற்றும் சமூக தொடர்பு உள் ளிட்ட நிலைகளிலான இரு தரப்பு தொடர்புகள் மேலும் பலமடைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன் என்று மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இரு வேறு விபத்துகளில் சிறுவர்கள் இருவர் பலி!

கொழும்பு, மே 26

நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துகளில் சிறுவர்கள் இருவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை - ஹக்மனை பகுதியில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற 14 வயது சிறுவன் லொறியுடன் மோதுண்டு உயிரிழந்தார்.

இதேபோன்று, இதேவேளை, மொனராகலை, எதிமலை பகுதியில் முன்னால் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் 15 வயது சிறுவன் உயிரிழந்தார். மேலும், 4 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சிரிகல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் அனைவரும் சிறுவர்கள் என்றும் அவர்களில் எவரும் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

சுற்றுலாவிகள் வருகை:

# 10 இலட்சத்தை நெருங்குகிறது

கொழும்பு, மே 26

கடந்த ஜனவரி முதலாம் திகதியில் இருந்து கடந்த 21ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 9 இலட்சத்து 88 ஆயிரத்து 669 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலா பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். ஒரு இலட்சத்து 88 ஆயிரத்து 694 பேர் அந்த நாட்டிலிருந்து வருகை தந்துள்ளனர்.

ரஷ்யாவிலிருந்து ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 840 பேரும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 93 ஆயிரத்து 248 பேரும் ஜேர்மனியிலிருந்து 67 ஆயிரத்து 381 பேரும் பிரான்ஸிலிருந்து 55 ஆயிரத்து 587 பேரும் சீனாவிலிருந்து 54 ஆயிரத்து 223 பேரும் அவுஸ்திரேலியாவிலிருந்து 42 ஆயிரத்து 301பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் 4 அமைப்பாளர்கள் விலகல்!

கொழும்பு, மே 26

ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை தொகுதி அமைப்பாளர் வசந்த அலுவிகார, ரத்தொட தொகுதி அமைப்பாளர் ரஞ்சித் அலுவிகார, தம்புள்ளை தொகுதி அமைப்பாளர் சம்பிக்க விஜயரத்ன ஆகியோர் தமது பதவிகளிலிருந்து விலகியுள்ளனர்.

உள்ளூராட்சிமன்ற அதி கார சபைகளுக்கு உறுப்பினர் நியமனத்தில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளே இந்த பதவி விலகல்களுக்குக் காரணம் என்று குறிப்பிடப்படுகிறது.

முன்னதாக அந்தக் கட்சியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜயசிறி பண்டாரவளை தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நோர்வே ஆய்வு கப்பலுக்கு அரசாங்கம் அனுமதி மறுப்பு

### தடை தொடர்வதாக விளக்கம்



கொழும்பு, மே 26

நோர்வே நாட்டின் "டாக்டர் ப்ரிட்ஜோப் நான்சன்" என்ற ஆய்வுக் கப்பலின் இலங்கை வருகைக்கான கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

உலக நாடுகளின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வருவதை மையப்படுத்தி ஏற்பட்ட புவிசார் அரசியல் நெருக்கடி, இராஜதந்திர அழுத்தங்களால் ஆய்வு கப்பல்கள் இலங்கை வருவதற்கு தடை விதிக்கப் பட்டிருந்தது. எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை இந்தத் தடை நடைமுறையில் இருக்கும். எனவே, இதனை காரணம் காட்டியே நோர்வே ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி மறுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.


நோர்வேயின் ஆய்வுக் கப்ப லான டாக்டர் ப்ரிட்ஜோப் நான்சன் கடல்சார் ஆய்வில் ஈடுபட்டு வருகிறது. கடலுக் கடியில் தானியக்க வாகனங்களை பயன்படுத்துவது உட் பட சிக்கலான, பல்துறை ஆராய்ச்சிகளை இந்தக் கப்பல் முன்னெடுத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாட்டை வந்தடைந்தார் நியூசி. துணை பிரதமர்!

கொழும்பு, மே 26

நியூசிலாந்தின் துணை பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான வின்செண்ட் பீற்றர்ஸ் நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணமாக நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அவர் தலைமையிலான நால்வர் குழு கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக நாட்டை வந்தடைந்தனர்.



இந்தப் பயணத்தில் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட பல முக்கிய தலைவர்களை அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர் என்று தெரிய வருகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் விற்பனை!



திருகோணமலை, மே 26

திருகோணமலை, கந்தளாய் பகுதியில் ஆயுர்வேத மருந்து களை விற்பனை செய்வதாக கூறி, பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனையில் ஈடு பட்ட நபர் ஒருவர் கடந்த 23 ஆம் திகதி கைது செய்யப்பட் டுள்ளார்.

குறித்த நபர் கந்தளாய் நக ரில் இயங்கி வரும் ஆயுர்வேத மருந்தகத்தின் மூலமாகவே இந்த செயல்களில் ஈடுபட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி திஸ்ஸ விதானகேவின் வழிகாட்டுதலின் கீழ் முன்னெ டுக்கப்பட்ட சோதனையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சோதனையின் போது எட் டுப் பெட்டிகளில் காணப்பட்ட மொத்தம் 10, 920 போதை மாத் திரைகள்பறிமுதல்செய்யப்பட்டன. அவற்றின் மொத்த பெறுமதி 21 இலட்சத்து 84,000 ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், மாணவர் களை இலக்கு வைத்து போதைப் பொருட்கள் விற்பனை செய்யப் பட்டமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# கிழக்கு மாகாண முதல்வர் வேட்பாளராக அதாவுல்லா

## மு.கா. , தே.கா. தலைவர்கள் இணக்கம்



ஏறாவூர், மே 26

**கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக தேசிய காங்கிரஸின் தலைவர் அதாவுல்லா களமிறங்கவுள்ளதாக தேசிய காங்கிரஸ் மற்றும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் பீட உறுப்பினர்கள் தெரிவித்தனர்.**

கடந்த வாரம் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா மற்றும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கி டையில் சந்திப்பொன்று இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பானது எதிர் காலத்தில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது பற்றியதான தென தெரிவித்தனர்.

குறிப்பாக கிழக்கு மாகா ணத்தில் பொதுச்சின்னத்தில் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ. எல்.எம். அதாவுல்லாவை முதல மைச்சர் வேட்பாளராக போட் டியிடுவதற்கான முஸ்தீபுகள் இடம்பெறுவதாக அரசியல் பீட வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

இதேவேளை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் எஸ் எம்.எம். முஷாரப் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைவது குறித்து பேச்சு வார்த்தைகள் இறுதிக்கட் டத்தில் உள்ளதாகவும் நம்பத் தகுந்த அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வாக்குப் பலம் சரிவிலிருந்து பாராளு மன்றத் தேர்தலில் பின் உயர்வ டைந்துள்ளது.

இதேவேளை, நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் முஸ்லிம் கட்சிக ளின் வாக்குகள் அதிகரிக்கப் பட்டுள்ளதாகவும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீட உறுப்பினர் ஒருவர் தெரிவித் தார். (எ)

# "இனவாதிகள் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்"

கொழும்பு, மே 26

ஐக்கியமாக வாழும் சமூகங் கள் மத்தியில் இனவாதங்களை உருவாக்கும் இனவாதிகள் யாராக இருந்தாலும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த நீதி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் எம். எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப் பாடு அமைச்சின் குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவை(திருத்தம்) சட்டமூல குழு விவாதம் கடந்த 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இக்குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீதி மற்றும் தேசிய ஒருங்கி ணைப்பு அமைச்சானது மிக முக்கியமான அமைச்சாகும். நமது நாட்டில் நீதியை நிலை நாட்டுவதற்கும் தேசிய ஒருங் கிணைப்புக்கும் சிறந்த முறை யில் இயங்கி நமது நாட்டில் வாழும் சகல இன மக்களும் ஒற்றுமையாகவும் உரிமையுட னும் வாழக்கூடிய செயல்பாடு களை முன்னெடுக்க வேண்டும். ஆளும் கட்சியினர் நாட்டு மக்க ளுக்கு வழங்கிய மிக முக்கியமான வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய பெரும் பொறுப்பு நீதி மற்றும் தேசிய ஒருங்கி ணைப்பு அமைச்சுக்கு உள்ளது என்பதனை மறந்து விடக் கூடாது.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவோம் என வாக்குறுதி அளித்துவிட்டு இதுவரையும் அது தொடர்பான எந்தவித செயல்பாடுகளையும் முன்னெடுக்காமல் மாறாக பயங்கரவாத தடைச் சட்டத்தை பாவித்து அப்பாவி மக்களை கைது செய்யும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதா னது இவ்வாட்சியின் மீது மக்களுக்குள்ள நம்பிக்கையை பலவீனப்படுத்தும் செயல்பா டாகும். எனவே, பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதற்கான ஏற்பாடுகளை நீதி அமைச்சு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். (எ)

# ஏறாவூரில் விபத்து பாதசாரி ஒருவர் பலி

## வாகனம் தப்பியோட்டம்

ஏறாவூர், மே 26

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைக்குடா வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற் றது.

ஏறாவூர் - புன்னைக்குடா வீதியின் 2 ஆவது கிலோ மீற்றர் மைல் கல்லுக்கு அருகில் வாக னம் ஒன்று, பாதசாரி ஒருவர் மீது மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றது.


விபத்தில் பலத்த காயம டைந்த பாதசாரி, மட்டக் களப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் இன்னும் அடையாளம் காணப்பட வில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்கு காரணமான வாகனம் தொடர்பிலும் தகவல்கள் வெளியாகவில்லை.

சம்பவ இடத்தில் இருந்த சி. சி.ரிவி காட்சிகள் மூலம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித் தனர். (எ)

# பூப்பந்தாட்டத்தில் முதலிடம்



காரைதீவு, மே 26

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச செயலக மட்ட பூப்பந்தாட்ட போட்டி களில் காரைதீவு விளையாட்டு கழகம் இம்முறையும் ஆண் பெண் இரு பாலருக்குமான போட்டிகளிலும் முதலிடத் தைப் பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

காரைதீவு பிரதேச செயலக மட்ட விளையாட்டு விழாவின் பூப்பந்தாட்ட போட்டிகள் நிந்தவூர் எம்.ஏ.சி. விளை யாட்டு பூங்காவில் நேற்று முன்தினம் நடைபெற்றன.

ஆண்களுக்கான போட்டி யில் காரைதீவு விளையாட்டு கழகம் முதலிடத்தையும் இரண்டாமிடத்தை காரைதீவு பூப்பந்தாட்ட விளையாட்டு கழகமும் பெற்றுக் கொண்டன.

பெண்களுக்கான போட்டி யில் காரைதீவு விளையாட்டுக் கழகம் முதலிடத்தை பெற்றுக் கொண்டது. (எ)

# சீரற்ற காலநிலையால் உப்பு உற்பத்தி பாதிப்பு



திருகோணமலை, மே 26

திருகோணமலை, கிண்ணி யாவில் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அவ்வப்போது பெய்த கடும் மழை காரணமாக உப்பு உற்பத்தி மேற் கொள்ள முடியாத நிலை ஏற் பட்டி ருப்பதாக உப்பு உற்பத் தியாளர்கள் கவலை வெளி யிட்டுள்ளனர்.

கிண்ணியா பிரதேசத்தில் வில்வெளி, கச்சக்கொடித்தீவு மற்றும் பொன்னவரந்தீவு ஆகிய பகுதிகளில் சுமார் 250இற்கும் மேற்பட்ட ஏக்கர் உப்பு வயல்கள் காணப்படுகின் றன.

இங்கு, மார்ச் மாதம் உப்புச் செய்கையை ஆரம்பித்து மே மாதம் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் இறுதிவரை உப்பு அறுவடை நடைபெறுவது வழக்கம்.

ஆனால், கடந்த இரு மாதங்களாக உப்பு உற்பத்தியை முன்னெடுப்பதற்காக மேற் கொண்ட அனைத்து முயற் சிகளும் மழை காரணமாக இன்று வரை கைகூடாத நிலையிலேயே இருப்பதாக உப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

சீரற்ற காலநிலை காரண மாக தற்போது உப்பு வயல்க ளில் மழைநீர் தேங்கி நிற்கின் றது.இதனால் அந்த நிலங்களி லிருந்து நன்னீர் செறிவை, முழுமையாக இல்லாமல் செய்த பின்னரே உப்பு உற்பத் தியை முன்னெடுக்க முடியும்.

இந்த நிலையில் உப்பு வயல் நிலங்களை சாதாரண நிலைக்கு கொண்டு வருவதற்கு இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் கூட எடுக்கலாமென அச்சம் வெளி யிட்டுள்ளனர்.

உப்பு வயல்களை நம்பி, வாழும் சுமார் 300 குடும்பங்க ளின் வாழ்வாதாரங்கள் கடுமை யாக பாதிக்கப்பட்டிருப்பதாக கச்சக்கொடித்தீவு சௌபாக்கிய உப்பு உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் எம். ஏ. சதாத் தெரிவித்தார்.

ஒவ்வொரு வருடமும் இவர் கள் பிரதேச சபைக்கு முறை யாக வரி செலுத்தி வருகின் றார் கள். இந்த நிலையில், பாதிப் புகளை சந்திக்கின்ற போது, அவர்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும் எனவும் அர சாங்கத்திடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன்மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல்!

கீவ், மே 26

போர் நிறுத்த பேச்சுவார்த்தைக்கு இடையே உக்ரைன் மீது ரஷ்யா மிகப்பெரிய அளவில் ட்ரோன் தாக்குதல் நடத்தியது. இதனால், இரு நாடுகள் இடையே பதற்றம் அதிகரித்துள்ளது.

நேட்டோ கூட்டணியில் இணைய முயன்றதற்காக உக்ரைன் மீது ரஷ்யா 2022ஆம் ஆண்டு போர் தொடுத்தது. 3 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் செயல்படுகின்றன. அவற்றின் உதவியால் உக்ரைன் போரில் தாக்குப்பிடித்து நிற்கிறது.

இதற்கிடையே ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் உக்ரைன் சென்று போர் நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது போரை நிறுத்தவில்லை எனில் ரஷ்யா மீதான பொருளாதாரத் தடை மேலும் விரிவுபடுத்தப்படும் என எச்சரிக்கப்பட்டது.

இதனையடுத்து போர் நிறுத்த பேச்சுவார்த்தைக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைனுக்கு அழைப்பு விடுத்தார். அப்போது பேச்சுவார்த்தை முடியும் வரை தற்காலிக போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என உக்ரைன் வலியுறுத்தியது. ஆனால் புடின் அதனை நிராகரித்தார்.

எனினும் திட்டமிட்டபடி துருக்கியின் இஸ்தான்புல் நகரில் இரு நாடுகள் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆனால், போர் நிறுத்தம் தொடர்பில் எந்தவித உடன்பாடும் எட்டப்படவில்லை. இந்த நிலையில் உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா சரமாரி ட்ரோன் தாக்குதல் நடத்தியது. ஒரே நாளில் 245 ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அங்குள்ள பல கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்து 15 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது. மீட்புப் படையினர் அவர்களை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்தனர். (எ)

# இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்; காஸாவில் 79 பேர் உயிரிழப்பு!



காஸா, மே 26

**காஸா முனையில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய கொடூரத் தாக்குதலில் 79 பேர் உயிரிழந்தனர்.**

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு கடத்திச் சென்றனர்.

இதையடுத்து ஹமாஸ் அமைப்பு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காஸா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. இதேவேளை, பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும் இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணயக் கைதிகளில் சிலர் ஹமாஸ் அமைப்பினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டன.

இந்த நிலையில், காஸா முனையில் இஸ்ரேல் இராணுவம் நேற்றுக்காலை நடத்திய தாக்குதலில் 79 பேர் உயிரிழந்தனர்.

மேலும், பலர் காயமடைந்துள்ளனர். இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் காஸாவில் ஹமாஸ் அமைப்பினர் உட்பட 53 ஆயிரத்து 901 பேர் இதுவரை உயிரிழந்தனர். (எ)

# போருக்கு மத்தியில் கைதிகள் பரிமாற்றம்

கீவ், மே 26

உக்ரைனும் ரஷ்யாவும் தங்கள் வசம் உள்ள கைதிகளை நேற்று பரிமாற்றம் செய்து கொண்டன.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் இன்று ஆயிரத்து 186ஆவது நாளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால் அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில் போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இதனிடையே போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பில் உக்ரைன் - ரஷ்யா அதிகாரிகள் இடையே துருக்கியில் கடந்த 15ஆம் திகதி நேரடி பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பில் எந்த முடிவும் எட்டப்படாமல் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

இதேவேளை பேச்சு வார்த்தையின்போது இரு தரப்பும் தங்கள் வசம் உள்ள கைதி களை பரிமாற்றம் செய்துகொள்ள சம்மதம் தெரிவித்தன.

இந்த நிலையில், உக்ரைனும் ரஷ்யாவும் தங்கள் வசம் உள்ள கைதிகளை நேற்று பரிமாற்றம் செய்துகொண்டன. இதன்படி 307 உக்ரைனிய போர் கைதிகளை ரஷ்யா விடுதலை செய்தது. இதற்கு பதிலாக 307 ரஷ்ய போர் கைதிகளை உக்ரைன் விடுதலை செய்தது. (எ)

# "அணு ஆயுதத்தை காட்டி அச்சுறுத்த முடியாது"

மொஸ்கோ, மே 26

அணு ஆயுதத்தை காட்டி பாகிஸ்தான் இந்தியாவை அச்சுறுத்த முடியாது என்று

தி. மு. கவின் கனிமொழி எம்.பி. தெரிவித்தார்.

பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா மேற்கொண்ட ஒப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையும் இந்தியா - பாகிஸ்தான் இடையிலான மோதல் குறித்தும் சர்வதேச நாடுகளுக்கு தெளிவாக விளக்குவதற்காக அனைத்துக் கட்சி எம். பிக்களை உள்ளடக்கிய 7 குழுக்கள் உருவாக்கப்பட்டன.

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி எம்.பி. தலைமையில் ஒரு எம். பிக்கள் குழுவினர் ரஷ்யா சென்றனர். மொஸ்கோ நகரில் ரஷ்ய கூட்டமைப்பின் துணை வெளிவிவகார அமைச்சர் ஆண்ட்ரே ருடென்கோவை இந்திய எம். பிக்கள் குழுவினர் சந்தித்து பேசினர்.

மொஸ்கோவில் செய்தியாளர்களை சந்தித்த கனிமொழி எம்.பி. கூறுகையில்,

இந்தியா-பாகிஸ்தான் மோதல் குறித்த பல தவறான தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

அத்தோடு பாகிஸ் தான் அணுசக்தி நாடு என்றும் அது அணு ஆயுதங்களை கொண்டிருக்கிறது என்றும் தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது.

ஆனால், நாங்கள் உண்மையை வெளிப்படுத்தவும் உண்மையில் நடந்ததை தெளிவுபடுத்தவும் விரும்பினோம். மேலும்,

அணு ஆயுதத்தை காட்டி இந்தியாவை அச்சுறுத்த முடியாது என்பதையும் நாங்கள் தெளிவாக கூற விரும்பினோம்- என்றார். (எ)

ரோஹிங்கியா அகதிகளுடன் சென்ற

# படகுகள் கவிழ்ந்ததில் 427 பேர் உயிரிழந்தனர்

நைப்பியிதோ, மே 26

ரோஹிங்கியா அகதிகளுடன் சென்ற படகுகள் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 427 பேர் உயிரிழந்தனர்.

மியன்மாரில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் காரணமாக அங்கிருந்து ரோஹிங்கியா முஸ்லிம்கள் அண்டை நாடுகளுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்து வருகின்றனர். குறிப்பாக, பங்களாதேஷில் ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்ட ரோஹிங்கியாக்கள் அதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். மேலும், கடல் வழியாக இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளுக்கு செல்லும் முயற்சியிலும் ரோஹிங்கியாக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், பங்களாதேஷின் கோக்ஸ் பசார் அகதிகள் முகாமில் வசித்து வந்த ரோஹிங்கியாக்களில் 267 பேர் படகு மூலம் இந்தோனேஷியாவுக்கு செல்ல முயற்சித்தனர். அப்போது அவர்கள் சென்ற படகு மியன்மார் கடற்பகுதியில் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவத்தில் 201 பேர் உயிரிழந்தனர். இதேவேளை 66 பேர் உயிர் பிழைத்தனர். இந்தச் சம்பவம் கடந்த 9ஆம் திகதி நடந்துள்ளது.

இதற்கு அடுத்த நாள் 247 ரோஹிங்கியா அகதிகளை ஏற்றிக்கொண்டு சென்ற மற்றொரு படகு கடலில் கவிழுந்து விபத்துக்குள்ளானது.

இதில் 226 பேர் உயிரிழந்தனர். இதேவேளை 21 பேர் உயிர் பிழைத்தனர். இந்த இரு நாட்களில் இடம் பெற்ற படகு விபத்துகளில் 427 பேர் உயிரிழந்தனர். (எ)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது 50 சதவீதம் வரி விதித்த ட்ரம்ப்

வாஷிங்டன், மே 26

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அடுத்த மாதம் முதல் 50 சதவீதம் பரஸ்பர வரி விதிக்க பரிந்துரைப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.




இதன்படி, ஜூன் முதலாம் திகதி முதல் சொகுசு பொருட்கள், மருந்துகள் மற்றும் பிற பொருட்களுக்கு கடுமையான வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் கூறியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்காவிடமிருந்து வர்த்தக நன்மைகளைப் பெறுவதற்காகவே உருவாக்கப்பட்டது என அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படாத ஐபோன்களுக்கு 25 சதவீதம் இறக்குமதி வரியை விதிக்கவும் அமெரிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் மூலம், அமெரிக்காவில் விற்கப்படும் ஐபோன்கள் இந்தியாவிலோ அல்லது வேறு எங்கோ உற்பத்தி செய்யப்படுவதற்கு பதிலாக, அமெரிக்காவிலேயே உற்பத்தி செய்யப்பட வேண்டும் என எதிர்பார்ப்பதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (எ)

# தங்கச்சுரங்கத்தில் சிக்கிய 260 பேர் பத்திரமாக மீட்பு!



ஜொகன்னஸ்பேர்க், மே 26

தென்னாபிரிக்காவில் தங்கச் சுரங்கத்தில் சிக்கிய 260 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

தென்னாபிரிக்காவின் சுரங்கத்துறையில் இலட்சக்கணக்கானோர் பணிபுரிகின்றனர்.


இந்த நிலையில், தலைநகர் ஜொகன்னஸ்பேர்க்கில் செயல்பட்டு வரும் தங்கச் சுரங்கத்தில் தங்கத்தைத் தோண்டும் பணியில் சுமார் 260 பேர் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது சுரங்கத்தின் பாரம் தூக்கி திடீரென செயலிழந்தது.

இதனால் சுரங்கத்தில் இருந்த தொழிலாளர்கள் வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டனர். தகவலின்பேரில் அங்கு விரைந்த மீட்பு படையினர் பல மணி நேரம் போராடி தொழிலாளர்கள் அனைவரையும் பத்திரமாக மீட்டு வெளியில் கொண்டு வந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீர் ரிஸ்வி அதிரடி ஆட்டம்

# பஞ்சாப் அணியை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் நிறைவு செய்தது டில்லி



ஜெய்ப்பூர், மே 26

பஞ்சாப் அணியை வீழ்த்தி ஐ. பி. எல். நடப்பு தொடரை வெற்றியுடன் நிறைவு செய்துள்ளது டில்லி அணி.

அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக சமீர் ரிஸ்வி 58 ஓட்டங்கள் அடித்தார்.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ.பி.எல். சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள இந்தத் தொடரில் ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 66ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி கப்பிட்டல்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின.


இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 206 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக ஸ்ரேயஸ் ஐயர் 53 ஓட்டங்கள் அடித்தார். டில்லி அணியின் சார்பில் அதிகபட்சமாக முஸ்தபிசுர் ரகுமான் 3 விக்கெட்களும் குல்தீப் யாதவ், விப்ராஜ் நிகம் ஆகியோர் தலா 2 விக்கெட்களும் முகேஷ் குமார் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 207 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய டில்லி அணி ஆரம்பத்தில் விக்கெட்களை இழந்து தடுமாறியது. இருப்பினும் கருண் நாயர் மற்றும் சமீர் ரிஸ்வி அதிரடியாக விளையாடி டில்லி அணியை வெற்றி பெற வைத்தனர்.

19.3 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்த டில்லி அணி 208 ஓட்டங்கள் அடித்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. டில்லி தரப்பில் சமீர் ரிஸ்வி 58 ஓட்டங்களும் கருண் நாயர் 44 ஓட்டங்களும் அடித்தனர். பஞ்சாப் தரப்பில் ஹர்ப்ரீத் பிரார் 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதன் மூலம் நடப்பு ஐ.பி.எல். தொடரில் தனது கடைசி லீக் ஆட்டத்தை விளையாடிய டில்லி அணி தொடரை வெற்றியுடன் நிறைவு செய்தது. (எ)

# எலினா சம்பியன்



பாரிஸ், மே 26

ஸ்ட்ராஸ்போக் ஓபின் ரென்னிஸ் தொடரில் எலினா ரைபகினா சம்பியனானார்.

ஸ்ட்ராஸ்போக் ஓபின் ரென்னிஸ் தொடர் பிரான்ஸில் உள்ள ஸ்ட்ராஸ்போக் நகரில் நடைபெற்றது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கஜகஸ்தானின் எலினா ரைபகினா, ரஷ்யாவின் சாம்சோனோவாவுடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தி சிறப்பாக விளையாடிய எலினா ரைபகினா 6-1, 6(2)-7(7), 6-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானார். (எ)

# பஞ்சாப் கிங்ஸ் அணி சரித்திர சாதனை



ஜெய்ப்பூர், மே 26

டில்லிக்கு எதிரான ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணி சரித்திர சாதனை படைத்தது.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ. பி. எல். சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள இந்தத் தொடரில் ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 66ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி - பஞ்சாப் அணிகள் மோதின.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 206 ஓட்டங்கள் குவித்தது.

பஞ்சாப் அணி நடப்பு ஐ.பி.எல். தொடரில் 200 ஓட்டங்களுக்கு மேல் அடிப்பது இது 7ஆவது முறையாகும். 7 முறையும் முதலில் துடுப்பாட்டம் செய்தே அவர்கள் 200 ஓட்டங்களுக்கு மேல் அடித்துள்ளனர். இதன் மூலம் ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் ஒரு தொடரில் முதலில் துடுப்பாட்டம் செய்து அதிக முறை 200 ஓட்டங்களுக்கு மேல் அடித்த அணி என்ற சரித்திர சாதனையை பஞ்சாப் அணி படைத்துள்ளது. (எ)

சர்வதேச ரென்னிஸ்:

# நோவக் ஜோகோவிச் மாபெரும் சாதனை

ஜெனிவா, மே 26

சர்வதேச ரென்னிஸ் தொடரில் 3ஆவது வீரராக நோவக் ஜோகோவிச் மாபெரும் சாதனை படைத்துள்ளார்.

முன்னணி வீரர்கள் பங்கேற்ற ஜெனிவா ஓபின் சர்வதேச ரென்னிஸ் தொடர் சுவிட்சர்லாந்தில் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், போலந்து வீரரான ஹூபர்ட் ஹர்காஸ் உடன் மோதினார்.

இதில் முதல் செட்டை ஹர்காஸ் கைப்பற்றி முன்னிலை பெற்றார். பின்னர் சரிவிலிருந்து மீண்டு வந்த ஜோகோவிச் அடுத்த 2 செற்களை அடுத்தடுத்து கைப்பற்றி வெற்றி பெற்றார். இந்த ஆட்டத்தில் ஜோகோவிச் 5-7, 7-6 மற்றும் 7-6 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

சர்வதேச ரென்னிஸில் ஜோகோவிச் கைப்பற்றிய 100ஆவது பட்டம் இதுவாகும். இதன் மூலம் இந்த மைல்கல்லை எட்டிய 3ஆவது வீரர் என்ற மாபெரும் சாதனையை ஜோகோவிச் படைத்துள்ளார்.

அந்த பட்டியல் வருமாறு,

1. ஜிம்மி கனோர்ஸ் (அமெரிக்கா) - 109 பட்டம்,
2. ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) -103 பட்டம்,
3. நோவக் ஜோகோவிச் (செர்பியா) - 100 பட்டம்.

(எ)

# ஹம்பர்க் ஓபின் ரென்னிஸ்: சம்பியனானார் கோபோலி



பெர்லின், மே 26

ஹம்பர்க் ஓபின் ரென்னிஸ் தொடரில் பிளாவியோ கோபோலி சம்பியனானார்.

பல முன்னணி வீரர்கள் பங்கேற்ற ஹம்பர்க் ஓபின் ரென்னிஸ் தொடர் ஜேர்மனியில் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் ரஷ்யாவின் ஆண்ட்ரே ரூப்லெவ், இத்தாலி வீரரான பிளாவியோ கோபோலி உடன் மோதினார். தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய பிளாவியோ கோபோலி 6-2 மற்றும் 6-4 என்ற நேர் செட் கணக்கில் அசத்தல் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.(எ)

# "உண்மையிலேயே மகிழ்ச்சி"

புதுடில்லி, மே 26

உண்மையிலேயே இந்த வாய்ப்பு எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்துள்ளது. ஏனெனில் எந்தவோர் இளம் கிரிக்கெட் வீரருக்குமே தங்களது நாட்டுக்காக விளையாட வேண்டும் என்ற ஆசை இருக்கும். அதிலும் குறிப்பாக டெஸ்ட் போட்டிகளில் விளையாட வேண்டும் என்பது பலரது ஆசையாகவும் இருக்கும். அந்த வகையில் எனக்கு இந்திய டெஸ்ட் அணியில் விளையாட வாய்ப்பு கிடைத்ததில் உண்மையிலேயே மிகப்பெரிய மகிழ்ச்சி என்று தமிழக வீரர் சாய் சுதர்சன் தெரிவித்தார்.

இந்திய டெஸ்ட் அணியில் முதல் முறையாக தெரிவானது குறித்து சாய் சுதர்சன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# இங்கிலாந்து இன்னிங்ஸ் வெற்றி


நாட்டிங்காம், மே 26

சிம்பாவே அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் வெற்றி பெற்றது.

சிம்பாவே கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடியது. இந்தப் போட்டி கடந்த 23 ஆம் திகதி தொடங்கியது.

இதன்படி முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடியது. முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்களை இழந்து 565 ஓட்டங்கள் குவித்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. அதிகபட்சமாக ஆலி போப் 171 ஓட்டங்களும் டக்கெட் 140 ஓட்டங்களும் ஜாக் கிராலி 124 ஓட்டங்களும் குவித்தனர். சிம்பாவே தரப்பில் அதிகபட்சமாக முசரபானி 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய சிம்பாவே அணிக்கு சீரான இடைவெளியில் விக்கெட்கள் விழுந்தது. இருப்பினும் தொடக்க ஆட்டக்காரரான பிரையன் பென்னட் நிலைத்து நின்று ஆடி அணியை மீட்டெடுத்தார். சிறப்பாக ஆடி சதமடித்த பிரையன் பென்னட் 139 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். முடிவில்




சிம்பாவே முதல் இன்னிங்ஸில் 63.2 ஓவர்களில் 265 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து "பாலோ-ஒன்" ஆனது. இங்கிலாந்து தரப்பில் ஷோயப் பஷிர் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

பின்னர் 300 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய சிம்பாவே255 ஓட்டங்கள் அடித்த நிலையில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் இங்கிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றியை பதிவு செய்தது. இங்கிலாந்து தரப்பில் ஷோயப் பஷிர் 6 விக்கெட்கள் அள்ளினார். அவரே ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பிய...

கலந்துரையாடவுள்ளனர்.

அரசியல், பொருளாதார உறவுகளை மீண்டும் புத்துயிர் பெறுவதை நோக்கமாகக் கொண்டு இந்தப் பேச்சுகள் நடைபெறும் என்று கூறப்படுகிறது. வர்த்தகம், புதிய ஒத்துழைப்பு துறைகள், போலந்து - இலங்கை கடல் துறைமுகங்களுக்கு இடையே ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் உட்பட பல்வேறு துறைகள் குறித்து போலந்து வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழு அரசாங்கத்துடன் கலந்துரையாடவுள்ளது.

ஐரோப்பிய நாடுகளுடன் நெருக்கமான உறவுகளை வளர்ப்பதில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் அரசாங்கம் ஆர்வம் காட்டி வருகிறது. இந்த நிலையில், போலந்து வெளிவிவகார அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கியின் இலங்கை வருகை முக்கியமானதாகக் கருதப்படுகிறது. (ஐ)

## 2 மாத...

குழந்தையை பெற்றோர் சேர்ப்பித்தனர். மேலதிக சிகிச்சைக்காக கடந்த 24ஆம் திகதி குழந்தை யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. இந்நிலையிலேயே குழந்தை உயிரிழந்தது.

திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மரண விசாரணைகளை நடத்தியதுடன், உடற்கூற்றாய்வு பரிசோதனைக்கும் உத்தரவிட்டார். (ஐ-05)

## கடும்...

பண்டாரவளை தொகுதி அமைப்பாளருமான சமிந்த விஜயசிறி, திருகோணமலை ஹொரவப்பொத்தானை தொகுதி அமைப்பாளர் அநுர புத்திக, தம்புள்ளை தொகுதி அமைப்பாளர் சம்பக விஜயரத்ன, ரத்தொட்டை தொகுதி அமைப்பாளர் ரஞ்சித் அலுவிஹாரே, நுவரெலியா மாவட்ட இணை அமைப்பாளர் அனகிபுர அசோக சேபால, காலி தொகுதி அமைப்பாளர் பந்துலால் பண்டாரிகொட ஆகியோர் தங்கள் பதவி விலகல் கடிதங்களை கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு அனுப்பியுள்ளனர்.

இதனிடையே, "கட்சியின் விதிகளின்படி அனைவரும் செயல்பட வேண்டும்", என்று அதன் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார கட்சியினரைக் கோரியுள்ளார்.

இதேவேளை, போனஸ் ஆசன பங்கீடு ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணிக்குள்ளும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 6 இல்)

## புகையிரத...

என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த கடுகதி ரயிலே பாதுகாப்பற்ற புகையிரத கடவையில் அவரை மோதியது. விபத்தையடுத்து, அந்த இடத்தில் மக்கள் பெருமளவில் குவிந்தனர். இதனால், பதற்ற நிலைமை உருவானது. அங்கு வந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்தினர்.

சடலத்தை பொறுப்பேற்க உறவினர்கள் மறுத்ததால் ரயில் தொடர்ந்து பயணிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. பொலிஸாரின் தலையீட்டை தொடர்ந்து உறவினர்கள் சடலத்தை பெற்றுக்கொண்டனர். இதனால், ஒருசில மணிநேர தாமதத்தின் பின்னர் ரயில் தொடர்ந்து பயணித்தது.

குறித்த பாதுகாப்பற்ற கடவையில் உள்ள சமிக்ஞை விளக்கு சரியாக செயல்படுவதில்லை என்றும் இதனாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகவும் இந்த நிலைமை தொடர்ந்து காணப்படுவதாகவும் பாரதிபுரம் கிராம மக்கள் தெரிவித்தனர். (ஐ)

# விபத்தில் 7 பேர் காயம்!

கொழும்பு, மே 26

இ. போ. ச. பேருந்தின் பின்புறத்தில் லொறி மோதிய விபத்தில் 7 பேர் காயமடைந்தனர்.

மொனராகலை - வெல்லவாய - தனமல்வில பகுதியில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது. இதில், பேருந்தில் பயணித்த 7 பேரே காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மொனராகலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை மொனராலை பொலிஸாரல் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ)

## கடலுக்கு...

வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வெளியிட்ட அறிக்கையிலேயே அந்தத் திணைக்களம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மேலும், தென்மேற்கு பருவமழையின் தாக்கத்தால் கடல் பகுதிகளில் காற்றின் வேகம் இடைக்கிடையே மணிக்கு 60-70 கிலோமீற்றர் வேகம் வரை அதிகரிக்கக்கூடும்.

சிலாபத்திலிருந்து கொழும்பு வழியாக மாத்தறைக்கும் காங்கேசன் துறையிலிருந்து முல்லைத்தீவு வழியாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 50-55 கிலோமீற்றர் வரை அதிகரிக்கலாம்.

மன்னாரிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந் தோட்டை வழியாக பொத்துவில் வரையிலான கடற்கரை பிராந்தியங் களில் உள்ள கடல் பகுதிகளில் சுமார் 2.5 - 3.0 மீற்றர் வரை கடல் அலைகள் எழக்கூடும்.

எனவே, மன்னார் முதல் புத்தளம் வரை, கொழும்பு வழியாக காலி வரையிலான கடலோர பகுதிகளில் கடல் அலைகள் நிலத்தை அடையும் வாய்ப்பு உள்ளது - என்றும் எதிர்வுகூறியுள்ளது. (ஐ)

## ஆசியாவின்...

இந்தப் பட்டியல் தலைசிறந்த விஞ்ஞானிகளின் விசேட சாதனைகளை அங்கீகரிக்கிறது. பொதுவாக, இந்த பட்டியலில் தேர்வு செய்யப்படும் தலைசிறந்த விஞ்ஞானிகள், அவர்களின் தரமான ஆய்வு வெளியீட்டுக்கப்பால், தேசிய அல்லது சர்வதேச விருதை பெற்றிருக்க வேண்டும். அத்துடன், முக்கியமான விஞ்ஞான கண்டுபிடிப்பு ஒன்றையும் மேற்கொண்டிருக்க வேண்டும் அல்லது கல்விசார் அல்லது தொழில்சார் தலைமைத்துவத்தை வழங்கியிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

பௌதிகவியல் மூத்த பேராசிரியரான புண்ணியமூரத்தி ரவிராஜன் யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடாதிபதியாக கடந்த ஐந்து ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். நானோ கட்டமைப்பு இலத்திரனியல் சாதனங்களின் உற்பத்தி மற்றும் சிறப்பியல்புகள் குறித்த ஆராய்ச்சி உட்பட, 6 தடவைகள் ஜனாதிபதி விருதுகளை அவர் வென்றுள்ளார். இது தவிர, வேறு பல விருதுகளையும் அவர் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று, கிழக்கு பல்கலைக் கழகத்தின் கணிதவியல் மூத்த பேராசிரியரான சுந்தரலிங்கம் திருக்கணேஷ் 2023ஆம் ஆண்டுக்கான அறிவியல் ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதை வென்றவர். மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்தவரான இவர், பத்திரிகைகள் பலவற்றில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

# ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் காலி அமைப்பாளரும் விலகல்!

கொழும்பு, மே 26

ஐக்கிய மக்கள் சக்தியின் காலி தொகுதி அமைப்பாளர் பந்துலால் பண்டாரிகொட தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான கட்சியின் தீர்மானங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களாலேயே பதவி விலக நேர்ந்தது என்றும் இது குறித்து கட்சித் தலைமைக்குத் தெரிவித்தும் சரியான பதில் கிடைக்காததால் பதவியை தான் இராஜிநாமா செய்தார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## வடக்கு, கிழக்கில்...

தெரிவித்தார்.

"உள்ளூராட்சி சபையில் ஆட்சியமைக்க சிங்கள கட்சி ஒன்றின் ஆதரவை கேட்பீர்களா?", என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், "நாம் அந்தக் கட்சிகளிடம் ஆதரவை கேட்கவில்லை. அவைகள் தங்களின் முடிவை எடுக்கும்", என்று பதிலளித்தார்.

இந்த சந்திப்பில் பங்கேற்ற ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், உள்ளூராட்சி தேர்தலில் 106 ஆசனங்களைப் பெற்ற ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வடக்கு, கிழக்கில் முன்னிலை வகிக்கும் உள்ளூராட்சி சபைகளில் ஏனைய தமிழ் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடும். ஏனைய தமிழ் கட்சிகளான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் அரசுக் கட்சி பெரும்பான்மை பெற்ற இடங்களில் அந்தக் கட்சிகள் ஆட்சியமைக்க ஆதரவளிப்பது என்று தீர்மானித்துள்ளோம்", என்றார்.

இதேசமயம், "வவுனியா செட்டிகுளம் பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்தி அதிக ஆசனங்களை பெற்றுள்ளது. அங்கு ஆட்சி அமைப்பதற்காக எமது ஆதரவைக் கோரியும் உள்ளது. எனினும், இலங்கை தமிழ் அரசு கட்சியும் அங்கு ஆசனங்களை பெற்றுள்ளது. செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு முழுமையான ஆதரவை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வழங்கும்", என்று ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க. துளசி தெரிவித்தார்.

நேற்று வவுனியாவில் நடந்த சந்திப்பில், புளொட் கட்சியின் தலைவர் த. சித்தார்த்தன், ஈ. பி. ஆர். எல். எவ் வின் தலைவர் க. சுரேஷ் பிறேமசந்திரன், ரெலோவின் செயலாளர் நாயகம் கோ. கருணாகரம், சமத்துவ கட்சியின் தலைவர் மு. சந்திரகுமார், ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் க. துளசி ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## அமைப்பாளர்கள்...

இதனைக் கூறினார்.

மேலும், உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பட்டியல் மூலம் கட்சிக்கு கிடைக்கப்பெற்ற ஆசனங்களுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதில் ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாக ஒருசில தொகுதி அமைப்பாளர்கள் பதவி விலக தீர்மானித்துள்ளனர். தொகுதியில் அதிக வாக்குகளை பெற்ற முதல் இரண்டு பேரை தெரிவுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு கட்சி, தொகுதி அமைப்பாளர்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்திருந்தது. இதேபோன்று பெண்களை நியமிப்பது தொடர்பாகவும் சில அளவுகோல்களை வழங்கி இருந்தது. அதன் பிரகாரம் அதிகமான இடங்களில் அவ்வாறு செயல்பட்டிருந்தது.

ஜனநாயகம் என்பது மக்களால் அதிகம் விரும்பப்படுகிறவர்களை தெரிவு செய்வதாகும். எனினும் இந்த முறைமையை 100 வீதம் பின்பற்றும் போது தொகுதி அமைப்பாளர்கள் பல்வேறு நெருக்கடி நிலைக்கு தள்ளப்படுகின்றனர். தொகுதி அமைப்பாளர் என்றவகையில் அந்தப் பிரச்னையை நானும் எதிர்கொள்கிறேன்.

இந்தத் தேர்தல் முறையினால் எனக்கு விருப்பமான - வினைத்திறன்மிக்க பலரை தெரிவு செய்ய முடியாமல் போயிருக்கிறது. தேர்தல் ஒன்று முடிவடைந்த பின்னர் தேசியப்பட்டியல் உறுப்பினர்களை தெரிவு செய்யும்போது இவ்வாறான பிரச்னைகள் ஏற்படுவது சாதாரணமானதாகும்.

அதனால், பதவி விலகத் தீர்மானித்திருக்கும் தொகுதி அமைப்பாளர்கள் இந்த நேரத்தில் சற்று பொறுமையாக இருக்கவேண்டும் என்பதே எனது தனிப்பட்ட கருத்து. அவர்கள் இந்த கட்சிக்காக ஆரம்ப காலத்தில் இருந்து பாடுபட்டவர்கள். தேர்தல் சட்டத்தில் இருக்கும் பிழையான நடவடிக்கையே இதற்கு காரணமாகும். அதனால், இது கட்சியின் தவறு அல்ல. தொகுதி அமைப்பாளர்களின் மன ஆதங்கமும் நியாயமானதாகும். அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட கோபத்தில் எடுத்த தீர்மானமே விலகல். இது ஒருசில நாட்களில் சரியாகும் - என்றார். (ஐ)

## தமிழ்...

சமகால அரசியல் குறித்த நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பாராளுமன் றத்தை கூத்து கூடமாக்க இடமளிக்க முடியாது. பாராளுமன்றத்தை நாங்கள் நிர்வகிக்கிறோம். புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கியுள்ளோம். கடந்த காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குள் கஞ்சா போதைப்பொருளை பாவித்தார்கள். குழுவாக ஒன்றிணைந்து போதைப்பொருள் பாவித்தார்கள். நான் நேரடியாக பார்த்துள்ளேன். ராஜபக்ஷக்களின் காலத்தில்தான் பாராளுமன்றம் மிகமோசமாக பாதிக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம் - என்றார்.

அத்துடன், வடக்கு என்பது யாழ்ப்பாணமல்ல, வன்னிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் உள்ளன. வடக்கு மாகாணத்தில் உள்ள 5 தேர்தல் மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. மன்னார், வவுனியாவில் முன்னிலையில் உள்ளோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாம் நிலையில் உள்ளோம். ஏனைய சிங்கள கட்சிகளை காட்டிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி முன்னிலையில் உள்ளது. பாராளுமன்றத் தேர்தலை விடவும் உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் வாக்குகள் குறைவடைந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

வடக்கு மாகாணத்தில் போட்டியிட்ட எமது வேட்பாளர்கள் புதியவர்கள். அத்துடன், ஒரு தரப்பினர் எமக்கு எதிராக இனவாதத்தையும் கட்டவிழ்த்து விட்டார்கள். உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலின்போது பாரம்பரியமான தமிழ் அரசியல் கட்சி தலைவர்களிடம் தமிழ் ராஜபக்ஷக்களை கண்டோம். தமிழ் ராஜபக்ஷக்கள் தோற்றம் பெறுவார்கள் என்று ஒருபோதும் நினைக்கவில்லை - இது கவலைக்குரியது - என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## திருகோணமலை விபத்து: ஒருவர் பலி; இருவர் காயம்!

திருகோணமலை, மே 26

திருகோணமலை நகரில் சம்பந்தர் வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளும் மினி வானும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயங்களுக்கு உள்ளாகினர். அத்துடன், மினி வானின் சாரதியும் காயமடைந்தார். மூவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், உந்துருளியில் பயணித்த ஒருவர் உயிரிழந்தார். (ஐ)

## காட்டு யானை தாக்கியதில் மகள் பலி; தந்தை காயம்!

### திருமலையில் சோகம்

திருகோணமலை, மே 26

காட்டு யானை தாக்கியதில்7 வயது சிறுமி உயிரிழந்த நிலையில், அவரின் தந்தை காயமடைந்துள்ளார்.

திருகோணமலை குமரன்கடவை அருகே இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த சிறுமியை தந்தை சைக்கிளில் ஏற்றிச் சென்றுகொண்டிருந்தபோது காட்டு யானை தாக்கியுள்ளது. இதில், சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தந்தை காயமடைந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் குமரன்கடவை பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

## பிரச்னைகளுக்கு தீர்வில்லையேல் நாளை தொழிற்சங்க போராட்டம்!

### மருத்துவ தொழில் வல்லுநர் ஒன்றியம்

கொழும்பு, மே 26

தங்களின் சேவையில் எழுந்துள்ள பிரச்னைகளுக்கு அரசாங்கம் தீர்வு வழங்க தவறியமையால் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க மருத்துவ தொழில் வல்லுநர்கள் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, இன்றையதினம் தங்கள் பிரச்னைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால், நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணிக்கு தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக மருத்துவ தொழில் வல்லுநர்கள் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

மருத்துவ சேவையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுடன் பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட போதிலும், அவை அனைத்தும் தோல்வியடைந்தன என்றும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அரச பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற மாணவர்களை சுகாதார துறைகளில் உள்வாங்கத் தவறியமை, தற்போதுள்ள சேவை வெற்றிடங்களுக்கு தீர்வுகளை வழங்கத் தவறியமை உள்ளிட்ட பிரச்னைகளை முன்வைத்தே இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. (ஐ)

# சுகாதார துறையில் வசதிகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை!

### பிரதமர் ஹரிணி உறுதியளிப்பு



கொழும்பு, மே 26

**சுகாதாரத் துறையில் வசதிகள், தொழில்முறையை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**

கடந்த சனிக்கிழமை தாதியர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நடைபெற்றது. இதில், உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எங்கள் அரசாங்கத்தின் கொள்கையின்படி, " வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்பதை அனைவருக்கும் பெற்றுக்கொடுப்பதே எங்கள் முதன்மையான குறிக்கோளாகும். ஓர் அழகான வாழ்க்கையில் ஒரு நல்ல ஆரோக்கியமான குடிமகனை உருவாக்குவது மிகவும் முக்கியம். உடல் ரீதியாக மட்டுமல்ல, மன ரீதியாகவும் ஆரோக்கியமாக இருப்பது மிகவும் முக்கியம். அதற்காக, ஓர் அரசாங்கமாக, சுகாதார முறைமையை வலுப்படுத்துவதற்கும், அதற்குள் உள்ள தொழில்களுக்கு தேவையான வசதிகள் மற்றும் பயிற்சிகளை வழங்குவ தற்கும் நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் தாதியர்களுக்கு அதிக தேவை உள்ளது. உங்கள் தொழில்முறை கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கு பொருத்தமான சம்பளம், தேவையான பதவி உயர்வுகள் மற்றும் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துவருகிறோம். மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் ஆரோக்கியமான ஒரு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான தொழிற் சூழலை உருவாக்குவது மிகவும் முக்கியம். இந்த எல்லா விடயங்களிலும் உங்கள் அமைச்சரும் அமைச்சும் தலையிடுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன் - என்றார். (ஐ)


# மாகாண சபைகள் தேர்தலை இழுத்தடிக்கவே அரசு முற்படும்!

### வடக்கு முன்னாள் முதலமைச்சர்

கொழும்பு, மே 26

உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் பின்னடைவை சந்தித்ததால் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் விரும்பாது. தொடர்ந்தும் இழுத்தடிப்பு செய்து காலதாமதப்படுத்தவே அது முற்படும் - என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் தேர்தலை நடத்த சாணக்கியன் தனிநபர் பிரேரணையை முன்வைக்கவுள்ளார். இது குறித்து வர்த்தமானி வெளியிடப்பட்டது. இந்த நிலையில், மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள்,



பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட விக்னேஸ்வரன்,

2018 ஆம் ஆண்டிலிருந்து மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்ச்சியாக பிற்போடப்பட்டு வரும் நிலையில், இனியும் தாமதமின்றி அந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்றே தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறேன்.

இருப்பினும், கடந்த பாராளுமன்றத் தேர்தலுடன் ஒப்பிடுகையில், அண்மையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பின்னடைவை சந்தித்திருப்பதனால், மாகாண சபைகள் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பதற்கே முற்படும் என்று கருதுகிறேன்.

மாகாண சபைகள் தேர்தலை நடத்தி, அதனூடாக சில சபைகள் ஏனைய கட்சிகள்வசம் செல்வதை அரசாங்கம் ஒருபோதும் விரும்பாது. ஆகவே, இந்த வருடமும் மாகாண சபைகள் தேர்தலை நடத்தாமல் காலந்தாழ்த்துவதற்கே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முற்படும் - என்றார். (ஐ)

## மத்துகம சுயேச்சை உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவு

கொழும்பு, மே 26

களுத்துறை மத்துகம பிரதேச சபைக்கு தெரிவான 4 உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தனர்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து மத்துகம பிரதேச சபைக்கு தெரிவான நால்வர் நேற்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தனர்.

நால்வரும் நேற்றைய தினம் கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேரில் சந்தித்து அவரின் கட்சியில் இணைந்தனர்.

மத்துகம பிரதேச சபைக்கு சுயேச்சை குழு சார்பில் தெரிவானவர்களே இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தனர். (ஐ)

# செலவின அறிக்கையை நாளைக்குள் வேட்பாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும்!

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, மே 26

உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்கள், வேட்பாளர்களை பிரதிநிதித்துவப் படுத்திய கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சை குழுக்களின் தலைவர்கள் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவின ஒழுங்குபடுத்துதல் சட்டத்துக்கு அமைய தமது தேர்தல் பிரசார செலவின் விபரங்களை வேறுவேறாகத் தயாரித்து நாளை செவ் வாய்கிழமை நள்ளிரவு 12 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளூர் அதிகார சபைகளின் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவால் அறிமுகப் படுத்தப்பட்ட https://cf.slestions.gov.lk இணைய இணைப்பிலும் பிரவேசித்து பதிவுசெய்த பின்னர் அதிலும் அறிக்கையை இணைக்க முடியும். குறித்த கால எல்லைக்குள் அவற்றை ஒப்படைக்க முடியாதிருப்பின் வேட்பாளர்களை பிரதிநிதித்துவப் படுத்திய கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் குழுக் களின் தலைவர்கள் போட்டியிட்ட உள்ளூர் அதிகார சபைகளின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைப்பதற்கும் வாய்ப்புள்ளது.

நாளைக்குள் தேர்தல் செலவின அறிக்கையை ஒப்படைக்காதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org